**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் சொல்லியிருப்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருப்பார்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) நான் சொல்வதே உங்களுக்குத் திருப்தியளிக்கும் என்று நினைத்துதான் சொன்னேன்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

## 3. கவன ஈர்ப்பு

### திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள கடைகளை காலி செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் வெளிநடப்புச் செய்துவிட்டு வந்துவிட்டீர்களா, இல்லையா? (குறுக்கீடு) சரி, நீங்கள் இங்கே இருந்தால் நல்லதுதான். (குறுக்கீடு).*

## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### அதிகாரிகளுடன் கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தமிழக ஆளுநர் மாளிகை செய்தி வெளியிட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் திரு. எ.வ. வேலு அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். அவர் பேசட்டும். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரினஸ், என்ன? (குறுக்கீடு) இல்லை. என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னருடைய விஷயத்தைப்பற்றி நான் சொல்லி விடுகிறேன்.*